## 1. அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளும், முஸ்லிம்கள் அதிகப்படியான மாநில சபை ஒன்றின் அவசியமும்

1957ஆம் ஆண்டின் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் வடமாகாணத்துக்கு ஒரு மாகாண சபையும், கிழக்கு மாகாணத்துக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகளுக்குமான ஆலோசனை முன்வைக்கப்பட்டது. மேலும் இந்த ஆலோசனைப்படி மாகாண எல்லைகளைத் தாண்டி இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சபைகள் ஒன்றிணையவும் முடியும்.

1988 ஜனாதிபதித் தேர்தலுக்கான தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனநாயக பொதுஜன ஐக்கிய முன்னணி (டீபிஏ) பின்வருமாறு பிரகடனம் செய்தது - பகுதி II - இனப்பிரச்சினைத் தீர்வு - அதிகாரப் பகிர்வின் அலகு (அ) இலங்கையில் அதிகாரப்பகிர்வு என்னும் எண்ணக்கரு அங்கீகரிக்கப்படுகிறது. (ஆ) வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து, முஸ்லிம் ஆதிக்க அலகின் கீழ்வரும் பிரதேசங்களைத் தவிர்த்து, தமிழ் ஆதிக்க அலகு ஒன்று உருவாக்கப்படும். (இ) அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளை அடித்தளமாகக் கொண்டு மட்டக்களப்பு, திருகோணமலை மன்னார் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களை இணைத்து ஒரு முஸ்லிம் ஆதிக்க அலகு உருவாக்கப்படும். (ஈ) இத்தகைய ஒவ்வோர் அலகிலும் சிங்களவர். மற்றும் ஏனையோரின் உரிமைகள் பூரணமாகச் சமத்துவ அடிப்படையில் அமைந்திருக்கும். 1992 டிசம்பர் 11ஆந் திகதி மங்கள முனசிங்க பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி மற்றும் சுயேட்சைக்குழு அங்கத்தவர்களான யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் கே.ஸ்ரீனிவாசன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் திரு.பஷீர் சேகு தாவூத் என்போரால் பின்வரும் விடயங்களில்

இணக்கம் காணப்பட்டது (அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியாக இரு அலகுகளை ஏற்படுத்தல் (ஆ) இந்திய அரசியலமைப்பில் இருப்பது போன்ற ஓர் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் (இ) நிரல் III (ஒருங்கிசைவு நிரல்) இல் உள்ள கருமங்களையும் அதிகாரப் பகிர்வு செய்தல் அல்லது நிரலை முற்றாக நீக்கி விடுதல்.

1994 ஆம் ஆண்டு ஐ.தே.க தேர்தல் விஞ்ஞாபனத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வை முன்வைக்கும் அரசியல் பிரேரணைகளிலும் காமினி திசாநாயக்க பின்வருமாறு கூறினார்: ‘இலங்கையில் வாழும் ஒவ்வோர் இனத்துவ மற்றும் மதக் குழுவினதும் தனித்துவம் மதிக்கப்படவும், பேணப்படவும் வேண்டுமென்பது எனது தொடர்ச்சியான நம்பிக்கையாகும். ஓர் உண்மையான ஜனநாயக சமுதாயத்தின் அடையாளமாகப் பல்வேறு அரசியல், இனத்துவ மற்றும் மதக்குழுக்களிடையே அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டுமென்பது எனது ஆழமான நம்பிக்கையாகும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும், சிறுபான்மையினங்களுடன் அதிகாரப் பகிர்வுக்கான முதலாவது முயற்சியாகிய அரசியலமைப்பு 13ஆவது திருத்தத்துக்கும் எனது பூரண ஆதரவைக் கொடுக்க வைத்தவை. துரதிஷ்டவசமாக, அரசியல் திடசித்தமின்மையும், 13ஆவது திருத்தத்தின் கீழ் வரும் அதிகாரங்களின் போதாத தன்மையும் வட-கிழக்குத் தமிழ் மக்களையும், இப்பொழுது மாகாணசபை முறைமை மீது அதிருப்தியடைந்துள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களையும் விரக்தி நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன. இப்பிரேரணைகள் அனைத்திலும் உள்ள முக்கியமாக அம்சங்கள் (அ) ஒவ்வோர் இனத்துவக் குழுவுக்கும் தனித் தனியான அதிகாரப் பகிர்வு அலகுகளை ஏற்படுத்தல் (ஆ) வட-கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பு தவிர்த்தல், கிழக்குமாகாணத்தில் ஒன்றுக்குமேற்பட்ட அதிகாரப்பகிர்வு அமைப்புக்களை ஏற்படுதல்.

பிணக்கைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முனைந்து நிற்கும்

இலங்கை அரசாங்கத்துடன் எல்.ரீ.ரீ.ஈ. தமிழ் ஈழப்பிரிவினையுத்தத்தை நடத்தி வருகின்றது. அரசாங்கம் பெரும் பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்பட்டு ஏனையோரின் முணுமுணுப்புக்கள் மத்தியிலும் எல்.ரீ.ரீ.ஈ யை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கச் சாத்தியமான சகல முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

இந்திய அரசு பல வழிகளிலும் இலங்கை அரசோடு ஒத்துழைத்த போதிலும் 1987 ஜுலை 26ஆந் திகதி ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்னமும் வட - கிழக்கு மாகாணங்களில் நிலவும் அமைதியற்ற நிலைகளே இதற்குக் காரணமாகும். அவசரகால நிலைமை நீக்கப்படவில்லை. பகை நடவடிக்கைகள் நிறுத்தம் இடம்பெறவில்லை. தமிழ்ப் போராளிகளினால் ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கையளிக்கப்படவில்லை. இந்திய அமைதிகாக்கும் படையினால் வட-கிழக்கில் பகை நடவடிக்கைகளை நிறுத்தவோ, பல்வேறு இனத்துவக் குழுக்களின் பௌதிகப் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யவோ முடியாது போய்விட்டது. தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணங்களுக்கென உருவாக்கப்பட்ட மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறுவதாயின் இன்றைய நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் படு தோல்வியைத் தழுவியுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ.யின் பிரதான கோரிக்கைகள் வட-கிழக்கு மாகாணங்களைப் பூகோள ரீதியில் இணைந்து ஒரு தமிழ்ப் பிராந்தியத்தை உருவாக்கி, காணி ஒதுக்கீடு குறித்து போதிய அதிகாரங்களை வழங்கி, இலங்கையின் ஆட்புலத்தினுள் ஒரு தனிநாட்டை உருவாக்குவதைத் தடைசெய்யும் அரசியலமைப்பிற்கான 6ஆவது திருத்தத்தையும் நீக்கவேண்டும் என்பதாகும். அவர்கள் தமிழ் மக்கள் பிரச்சினையில் ஒரு அர்த்தமுள்ள தீர்வு வேண்டுமெனில் தமிழ் பேசும் பிரதேசம் ஒன்று எனவும், பிரிக்கப்பட முடியாதது எனவும், தமிழ் பேசும் பிரதேசத்தின் புவியியல் இணைப்புத் தன்மையும் ஆட்புல ஒருமைப்பாடும் எவ்விதக் கேள்விக்கும் இடமின்றி அங்கீகரிக்கப்படல் வேண்டுமென்றும்

கருதுகின்றனர்.

'தமிழ் பேசும் மக்கள்' என்னும் பதம் ஒரு ஜன சமூகத்தையன்றி யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் மற்றும் இந்தியத் தமிழர் அனைவரையும் குறிக்கின்றது. 'தமிழ்பேசும்' மாநிலம் என்னும் பதம் வட-கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் புவியியற் பரப்பைக் குறிக்கின்றது. கிழக்கு மாகாணம் வரலாற்று ரீதியிாக மட்டக்களப்புத் தமிழரும், முஸ்லிம்களும் வாழும் பிரதேசங்களாகும். வரலாற்று ரீதியாக யாழ்ப்பாணத் தமிழரும் இந்தியத் தமிழரும் கிழக்கு மாகாணத்தில் வாழவில்லையென்பதால் அது அவர்களின் தாயகமாக முடியாது.

நீண்டகாலம் கிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கியவரும், முன்னைநாள் உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், நீதி அமைச்சருமாகிய திரு.கே.டபிள்யு.தேவநாயகம் மட்டக்களப்புத் தமிழர்கள் தம்மை யாழ்ப்பாணத் தமிழர்களிலிருந்து வேறுபட்ட ஒரு தனித்தன்மை கொண்ட தமிழர்களாக நோக்குகின்றனரென்றும், அவர்களுக்கு வித்தியாசமான சட்ட முறைகள் உண்டென்றும் கூறியுள்ளார். மட்டக்களப்புத் தமிழர் ஒரு வித்தியாசமான ஜனசமூகமென்பதற்கு ஆதாரங்கள் உண்டென்றும், ஆகவே வட பகுதி மக்களுக்குக் கிழக்கு மாகாணத்தில் தாயகம் இல்லையென்றும் அவர் கூறியுள்ளார். இந்தக் கண்ணோட்டத்துக்கு முன்னையநாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.செ.இராஜதுரை, திரு.பிரின்ஸ் காசிநாதர் மற்றும் திரு.திவ்வியநாதனும் வேறு பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வட மாகாணம் 3,429 சதுர மைல்களைக் கொண்டது. 1981 குடிசன மதிப்பின் பிரகாரம் 1,111,468. தமிழர் 92% ஆகவும், முஸ்லிம்கள் 5% ஆகவும் சிங்களவர் 3% ஆகவும் இருந்தனர். யாழ்ப்பாணக் குடாநாடு அண்ணளவாக 440 சதுர மைல்களைக் கொண்டது. இந்த 12.8% நிலப்பரப்பில்தான் 67% மான 738,788 வட மாகாண மக்கள் வாழுகின்றனர். சகல தமிழ்ப் போராளிக் குழுக்களும், அரசியற் கட்சிகளும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே

தமது தளங்களைக் கொண்டுள்ளதோடு, அங்கிருந்தே செயற்படுகின்றன. வட மாகாணத்தின் எஞ்சிய சகல மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி, நிலப்பரப்பில் 82%மான 2,989 சதுர மைல்களைக் கொண்டுள்ளன. ஆயினும் இம்மாவட்டங்களில் ஜனத்தொகை 370,616ஆக, அதாவது 33% ஆக மட்டுமே உள்ளது.

கிழக்கு மாகாணம் 3,839 சதுர மைல்கள் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பு விபரங்களின்படி தமிழர்கள் 42% ஆகவும், முஸ்லிம்கள் 33% ஆகவும், சிங்களவர்கள் 24% ஆகவும் இருந்தனர். 1016 சதுர மைல்கள் நிலப்பரப்பைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ளனர். இங்கு தமிழர் 73% முஸ்லிம்கள் 24% மற்றும் சிங்களவர் 3%. கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய பகுதிகளில் 72% நிலப்பரப்பைக் கொண்ட, அதாவது 2,823 சதுர மைல்களைக் கொண்ட திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழர் சிறுபான்மையினராகவே உள்ளனர். தமிழர்கள் 26% முஸ்லிம்கள் 37% மற்றும் சிங்களவர் 37% கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் கிராமங்களைப் போலவே தமிழ், சிங்களக் கிராமங்களும் பூகோள ரீதியில் நிலத்தொடர்பற்றவையாகவே அமைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் பாராளுமன்றத்துக்கும் கலைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண சபைக்கும் சமமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளனர். இது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகத் தமிழர்களோடு சமபலம் பெற்றவர்கள் என்பதை நிரூபிக்கிறது.

கிழக்கு மாகாணம், வட மாகாணத்தோடு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களின் இனத்துவ விகிதாசாரம் முக்கியமற்ற வெறும் 18% ஆவதோடு, முஸ்லிம்களின் அரசியல் பலமும் பெரிதும் வீழ்ச்சியுற்று வெறும் செல்லாக்காசாகிவிடுகிறது.

முன்னைய ஜனாதிபதி ஜயவர்தன தனது சொந்த அரசாங்கத்தினால் மாகாணசபைச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைத் தந்திரமாக ஏமாற்றி, அவசரகால நிலைப் பிரமாணங்களின் கீழ் வடக்கோடு கிழக்கை தற்காலிகமாக இணைத்து வடகிழக்கு மாகாணம் ஒன்றை ஏற்படுத்தி, கிழக்கு மாகாண முஸ்லிம்களைத் தமிழரின்கீழ் வாழும் அரசியல் பலமற்று ஒரு அடிமைச் சமுதாயமாக மாற்றினார். அரசியல் மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக வட,கிழக்கு மாகாணங்களை ஒரு தனி அலகாகத் தற்காலிகமாக இணைத்தது, தமிழர்கள் ஒருதலைப்பட்சமாகத் 'தமிழ் ஈழம்', என்ற தனிநாட்டைப் பிரகடனம் செய்வதற்கே இட்டுச் சென்றது. இந்த ஏற்பாடு ஒற்றையாட்சி, அதிகாரப்பகிர்வு என்னும் எண்ணக்கருக்களைக் கேலி செய்வதாக அமைந்தது.

வட-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு தனிப்பிராந்தியசபை அமைக்கப்பட்டால் எழக்கூடிய பாரதூரமான பிரச்சினைகள் பற்றி முஸ்லிம்கள் நன்கு அறிந்துள்ளனர். தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கில் மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர், தமிழ்த்தேசிய இராணுவம் - ரீ.என்.ஏ - கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களிலிருந்து பல பொலிஸ் நிலையங்களைத் தாக்கி நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை இரக்கமின்றிக் கொன்று குவித்தனர். இப்படுகொலை குறித்து அப்பொழுது முதலமைச்சராகவிருந்த வரதராஜப்பெருமால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை எல்.ரீ.ரீ.ஈ. கொன்று குவித்ததோடு, எமது பள்ளிவாசல்கள், பாடசாலைகள், நெல் வயல்கள் என்பவற்றுக்குத் தீ வைத்தது. எமது கால்நடைகளையும் கொள்ளையடித்தது. இறுதியில் பல நூற்றாண்டு

காலமாக வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு வீடுகளைவிட்டு வெளியேறுவதற்கு இரண்டு நாட்கள் அவகாசம் மட்டும் கொடுத்து விரட்டியடித்தனர். ஆயினும் வடக்கு கிழக்கு தமிழர்களும் முஸ்லிம்களும் பகைமையற்று அன்னியோன்னியமாக வாழவேண்டும் என்ற எமது விருப்பத்தின் பேரில் 1987 செப்ரெம்பரிலும், ஏப்ரலிலும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தூதுக் குழு சென்னைக்கு விஜயம் செய்து தமிழ் மிதவாதத் தலைவர்களுடனும் போராளிகள், குழுக்களுடனும் பரந்த அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

1987 ஜுலையில் இடம்பெற்ற இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபடி மேலும் முன்சென்று, கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிட்டு, தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையை அமைக்க உதவியது.

1960 செப்ரெம்பர் தமிழ், முஸ்லிம் கட்சிகளிடையே வட-கிழக்கு மாகாணங்களுக்கு தனியொரு மாகாணசபை இருக்குமென்றும், பகிர்வு செய்யப்பட்ட சமமான அதிகாரங்களோடு கூடிய இரு முஸ்லிம் இனத்துவ சபைகள் இருக்குமென்று இணக்கம் காணப்பட்டது. முஸ்லிம் இனத்துவச் சபை தமிழ் இனத்துவ சபைக்கு எந்த விதத்திலும் குறையுள்ளதாக இருக்காதென்றும் திடமாக முடிவு செய்யப்பட்டது. மாகாணசபை இரு சபைகள் கொண்ட சட்டமன்றமாக இருத்தல் வேண்டுமென்றும் இரண்டாவது சபையில் பிராந்தியத்தில் உள்ள சிறுபான்மையினங்களுக்குச் சமமான பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டும் மென்றும் இணக்கம் காணப்பட்டது.

ஆயினும் தமிழ் கட்சிகள் இப்பொழுது வட-கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனியான அதிகாரப்பகிர்வு அலகொன்றை உருவாக்குவதற்குச் சம்மதிப்பதில்லையென்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளன. தமிழர் ஆதிக்கஞ் செலுத்தும் வடகிழக்குப் பிராந்திய

சபையின் அதிகாரத்தின் கீழ் முஸ்லிம்களுக்கான உப-தேசிய அலகு ஒன்றைப்பற்றி அவர்கள் இப்பொழுது பேசுவது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 18% மான முஸ்லிம்கள் அரசியலமைப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளோடு மட்டும் திருப்தியடையவேண்டு மென்ற நிலைப்பாட்டையும் எடுத்துள்ளனர். அப்படியாயின் வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் 10% மான இலங்கைத் தமிழர்கள் இதேவிதமான அரசியலமைப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளோடு திருப்தியடையாது ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மானிலத்துக்கு அதிகாரப் பகிர்வுச் செயல்முறை மூலம் அரசியல் அதிகாரம் பகிரப்படவேண்டுமென்று கூறுவதை எப்படி நியாயப்படுத்துவது.

எமது சமீபத்திய அனுபவங்களிலிருந்து தமிழர்கள் முஸ்லிம்களைத் துரத்தி விட்டு, வட-கிழக்கு மாகாணங்களை ஒரு தனி இனத்துவ தமிழ்ப் பிராந்தியமாக்கி விரைவில் தமிழ் ஈழத்தைத் தாபிக்கும் நன்கு திட்டமிட்ட சதியொன்றில் ஈடுபட்டுள்ளனரென்பதில் வடகிழக்கு முஸ்லிம்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. தமிழ்த் தலைவர்கள் பசப்பு வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் காலத்துக்குக் காலம் கொடுத்தபோதிலும், உண்மையான நடைமுறையில் தமிழர்கள் முஸ்லிம்களின் சட்டநிலைத் தகவுள்ள உரிமைகளைச் சிதைத்து சின்னாபின்னமாக்கும் முயற்சிகளில் திட்டமிட்டுச் செயல்படுகின்றனர். வட-கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் தமது உயிரையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்குத் தனியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுவது இன்று ஒரு இன்றியமையாத விடயமாகியுள்ளது.

வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் ஏன் தமக்கெனத் தனியான ஓர் அதிகாரப் பகிர்வு அமைப்பு வேண்டுமென்று ஆழமாக விரும்புகின்றனரென்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளுதல் வேண்டும். தமிழர்களின் கடந்தகால நடத்தையும் முஸ்லிம்களின் கசப்பான அனுபவங்களுக்கும் அவர்களைத் தனியான அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கைக்குத் தள்ளியுள்ளது.

011903

வடகிழக்கு முஸ்லிம்களின் உயிர்களையும், மதத்தையும், கலாச்சாரத்தையும் தனித்துவத்தையும் பேணிப்பாதுகாக்கக் கூடிய ஒரே வழி அதிகாரப் பகிர்வுக்கான தனியான அமைப்பேயாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அரசாங்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் அதேநேரத்தில் வட-கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம்களை தமிழர் ஆதிக்கத்தின் கீழ் அரசியல், சமூக அடிமைகளாக மாற்றக்கூடாது. எமது வரலாற்றின் ஓர் இக்கட்டான காலகட்டத்தில் இன்றைய அரசாங்கம் முஸ்லிம்களுக்குத் துரோகமிழைக்காதென நாம் நம்புகின்றோம்.

கிழக்கு மாகாணத்தின் சிங்களவர்களும் முஸ்லிம்களும் மற்றும் பெருந்தொகையினரான தமிழரும் வட-கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு தனிப்பிராந்திய சபை அமைப்பதை எதிர்க்கின்றனர்.

இலங்கையிலுள்ள சிங்களவர் மற்றும் தமிழர்களைப் போலவே அதிகாரப் பகிர்வுக்கு முஸ்லிம்களுக்கு ஒரு முஸ்லிம் பெரும்பான்மைப் பிராந்தியசபை கிட்டுவது நியாயமேயாகும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக இல்லாத காரணத்தால் கிழக்கு மாகாணத்தில் ஒரு தனியான பிராந்திய சபையை உருவாக்குவது இங்குள்ள தமிழர்களின் நலன்களுக்கு உகந்த ஒரு விடயமாகவிராது.

இந்நிலைமைகளின்கீழ் வட-கிழக்கு மாகாணங்களில் அமையவிருக்கும் அதிகாரப்பகிர்வு அலகுகள் நிலைமைக்குப் பொருத்தமானவையாகவும், தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் தனியான இனத்துவ உரிமைகளையும் வரலாற்று ரீதியான வாழிடங்களையும் பாதுகாப்பவையாகவும் விளங்கவேண்டியது அவசியமாகும். அத்தோடு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும்

அதிகாரப் பகர்வு அலகுகளை உருவாக்கும்போது கிழக்கு மாகாணத்தையும், வட மாகாணத்தின் வேறு பிரதேசங்களையும் தமது தாயகமாக ஏற்றுக்கொண்டுள்ள சிங்களவர்களுக்கும் அநீதி இழைக்கப்படலாகாது.

இனத்துவ மனக்குறைகள் ஒரு சமூகத்தை அல்லது ஒரு மதத்தைச் சார்ந்தோருக்கு மாத்திரம் உரியதல்ல. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவருக்கும் மனக்குறைகள் உள்ளன. இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. இப்பிரேரணைகள் அனைத்திலுமுள்ள பொதுவான அம்சம் அதிகாரப் பகிர்வின் அலகாகும்.

பெரிதும் மத்தியப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சிக்கும், தனிநாட்டுக்கும் இடையில் ஒரு விட்டுக்கொடுக்கும் ஏற்பாடாக, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சகல இனத்துவக் குழுக்களாலும் அதிகாரம் முறையாகப் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒட்டுப்போடுவதும், அறைகுறையான நடவடிக்கைகளும் தீர்வை மேலும் கஷ்டமாக்கவே உதவும். பகிர்வு செய்யப்பட்ட அதிகாரங்கள் இனத்துவக்குழுக்கள் தாம் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசங்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு தீர்மானம் எடுக்கும் செயல்முறை பூரணமாக பங்கேற்பதற்கு உதவுவதாக இருத்தல் வேண்டும்.

தற்போதுள்ள முறையின்கீழ் மாகாண சபைகள் சட்டத்தில் முஸ்லிம்கள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. இன்றுள்ள நிலையின் பிரகாரம் சிங்களவர்கள் ஏழு மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ளதால் அவர்கள் ஏழு சபைகளில் அதிகாரமுள்ளவர்களாய் இருப்பார்கள். தமிழர்கள் 2 மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ளதால் அவர்கள் 2 சபைகளில் அதிகாரமுள்ளவர்களாய் இருப்பர். தற்போதுள்ள எந்த

மாகாணத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமாக இல்லாதிருப்பதால் அவர்கள் சிங்களவர்களைப் போன்று அல்லது தமிழர்களைப் போன்று அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாகச் சிறுபான்மை இனங்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே முஸ்லிம்களாகிய நாம் அலட்சியம் செய்யப்படுவதையும், எமது சட்ட நிலைத்தகவுள்ள உரிமைகள் மறுக்கப்படுதலையும் நாம் விரும்பவில்லை. நியாயமானதும், நீதியானதுமான ஒரு தீர்வு 74% சிங்களவருக்கு 7 சபைகளையும், 18% தமிழ்களுக்கும் 2 சபைகளையும், 8% முஸ்லிம்களுக்கு 1 சபையையும் உருவாக்குவதாகும்.

முஸ்லிம்களாகிய நாம் இலங்கைப் பிரஜைகள் என்றவகையில் சட்ட நிலைத் தகவின்படி கிடைக்க வேண்டிய உரிமைகளுக்கு அதிகமாக எப்பொழுதும் கேட்டதில்லை. நாம் பிரிவினையைக் கோரவில்லை. எமது மனக்குறைகளை தீர்ப்பதற்கு பயங்கரவாத வழிகளையும் நாடவில்லை.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கில் மாகாணசபை நிறுவப்பட்ட பின்னர் ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் தமிழர்களால் கொல்லப்பட்டும் காயமேற்படுத்தப்பட்டுமுள்ளனர். 200,000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அகதிகளாயுள்ளனர். 1989 நவம்பர் 17ஆந் திகதி தமிழ்த் தேசிய இராணுவம் ரீ.என்.ஏ அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களை ஏக காலத்தில் தாக்கியது - 100 பேருக்கு மேல் இறந்தனர். 200 பேருக்கு மேல் காயமுற்றனர். காரைத்தீவில் இடம்பெற்ற சம்பவம் வெறுப்புக்குரியதாகும்.

கனரக மோட்டார் மற்றும் வட-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சரால் வழங்கப்பட்ட வேறு யுத்த உபகரணங்களோடு காரைதீவு பொலிஸ் காவலரணைச் சூழ்ந்துகொண்ட 'ரீ.என்.ஏ' இராணுவத்தினர் முதலில் தமிழர்களை போய்விடுமாறு உத்தரவு பிறப்பித்தனர். 45 முஸ்லிம் பொலிஸ் ஒதுக்கப்படையினர் தனியாகப் பிரிக்கப்பட்டனர். இது தமிழர்களால் முஸ்லிம்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்பது தெளிவாக நிருபனமாகியது.

தமிழ் ஈழ யுத்தத்தின் காரணமாக வட-கிழக்குத் தமிழர் வீடுகளை விட்டு சுயமாக வெளியேறி இந்தியாவுக்கும் வேறு மேற்கு நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். ஆயினும், முஸ்லிம்களாகிய நாம் தமிழர்களால் எமது வீடுகளிலிருந்து விரட்டப்பட்டும்கூட எந்த முஸ்லிமும் எந்த அரபு அல்லது முஸ்லிம் நாட்டுக்கும் அகதிகளாகச் செல்லவில்லை, தமிழர்களுக்கெதிராக போரிடும் நோக்கில் இராணுவப் பயிற்சி பெறவும் செல்லவில்லை. அவர்கள் புத்தளம், குருநாகல், அனுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் பெரும் இன்னல்களை அனுபவித்தவர்களாய் வாழுகின்றனர். அகதி முகாம்களிலிருந்து 25-30 மைல்கள் தொலைவிலுள்ள தங்கள் வீடுகளுக்கு முஸ்லிம் அகதிகள் மீளக்குடியேறுவதைத் தமிழர் தடுக்கின்றனர். ஆனால் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் சுதந்திரமாகத் திரும்பி வந்து தமிழர்களால் விரட்டப்பட்ட முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளிவாசல்கள் மற்றும் நெற் காணிகளைத் தமக்குச் சொந்தமாக்குகின்றனர்.

## 2. இலங்கை முஸ்லிம்களின் இன உரிமைகளுக்கு உறுதியான பாதுகாப்பு அவசியம்

இலங்கை முஸ்லிம்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட இனமாகத் தொடர்ந்து கௌரவமாக வாழவேண்டுமானால் எமது பாரம்பரிய வசிப்பிடம், பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம், மார்க்கம், கலாசாரம், பாஷை ஆகியவற்றிற்கு உறுதியான பாதுகாப்பு அவசியம்.

இலங்கை சுதந்திரம் பெற்றபின் மாறிமாறி வந்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் படிப்படியாகச் சூறையாடி வந்ததனால் சிங்களப் பிரதேசங்களில் வாழும் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் இன்று இனரீதியாகத் தம்மை அடையாளம் காட்டக்கூடிய அடிப்படை உரிமைகளை முற்றாகவோ அல்லது ஒரு கணிசமான அளவுக்காவது பறிகொடுத்து விட்டனர். இவர்களுக்கு எல்லை குறிப்பிடக்கூடிய பாரம்பரிய முஸ்லிம் பெரும்பான்மை வசிப்பிடம் கிடையாது. பிறரிடம் தங்கியில்லாத சுதந்திரமான பொருளாதாரத் தொழிற்துறைகள் இல்லை. தங்களுக்கான முஸ்லிம் பிரதிநிதிகளை தாங்களே தெரிவு செய்யக்கூடிய வாய்ப்புக் கிடையாது. இன்று கல்வி கற்கவும், தொழில் புரியவும், மார்க்க, கலாசார அனுஷ்டானங்களை அறிந்து செயற்படவும் சொந்த தாய்ப்பாஷை இல்லை. தமது இஸ்டப்படி பள்ளிவாசல்களிலும், பொது இடங்களிலும் மார்க்க, கலாசார சடங்குகளைத் தடையின்றி நிறைவேற்றும் சுதந்திரமும் பாதுகாப்பும் கிடையாது.

சுதந்திரத்தின் போது எதுவித நிபந்தனையுமின்றிச் சிங்களவரோடு சேர்ந்து நின்றதற்கும் தனிச்சிங்களச் சட்டம் வந்த போது தமது தாய் மொழியான தமிழை ஒதுக்கிவிட்டு பெரும்பான்மை இனத்தவரின் தாய்மொழியான சிங்களத் திணிப்பை ஆதரித்ததற்கும், முஸ்லிம் அரசியற் கட்சியைவிடச் சிங்களக் கட்சிகளான ஐக்கிய

தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளில் நம்பிக்கை வைத்துப் பெரும்பான்மை இனத்தவர்களோடு ஐக்கியமாக வாழவேண்டும் என்பதற்காக அவர்களின் அபிலாஷைகளை அடைவதற்காக அனுகூலமாக நடந்து கொண்டதற்கும் தகுந்த சன்மானமாகச் சிங்களப் பகுதிகளில் வாழும் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்குக் கிடைத்துள்ள வெகுமதிதான் அவர்களின் இன்றைய அவலநிலை. இதுதான் முஸ்லிம் தலைவர்கள் எமக்குத் தேடிவைத்துள்ள பெருஞ்செல்வம்.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு எல்லை குறிப்பிட்டுக் காட்டக்கூடிய முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள பாரம்பரிய வசிப்பிடங்கள் உண்டு. இலங்கைச் சிங்களவர், தமிழர் போன்று பிறரிடம் தங்கியில்லாத சுதந்திரமான காணிநிலத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயம், மீன்பிடி, மந்தை வளர்ப்பு ஆகிய பொருளாதாரத் தொழிற்துறைகள் இருக்கின்றன. முஸ்லிம்களுக்காக முஸ்லிம் பிரதிநிதிகளைத் தாங்களே தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பும் உண்டு. சொந்தத் தாய்ப்பாஷை மூலம் கல்வி கற்கவும், தொழில் புரியவும், மார்க்க கலாசார அனுஷ்டானங்களை அறிந்து கொள்ளவும், பள்ளிவாயலில் - உள்ளும் புறமும் தங்கு தடையின்றி மார்க்க, கலாசார சடங்குகளை நிறைவேற்றும் சுதந்திரமும் பாதுகாப்பும் உண்டு. சுதந்திரமாக ஒரு தனித் தேசிய இனமாகத் தம்மை அடையாளம் காட்டக்கூடிய முஸ்லிம்களின் இந்த ஜீவதார உரிமைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பேணிப்பாதுகாப்பதில்தான் இலங்கை முஸ்லிம் இனத்தின் எதிர்காலம் பெரிதும் தங்கியிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் பறிபோகுமானால் முழு இலங்கையிலும் முஸ்லிம்களின் இனத்தனித்துவமும், இஸ்லாம் மார்க்கமும் அழிந்து முஸ்லிம் சமூகம் ஒரு அடிமைச் சமூகமாக இலங்கையில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் எதிர்காலத்தில் ஏற்படும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் இன்று மிகவும் சிக்கலான, அபாயகரமான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதினை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். கடந்த பல வருடங்களாக எமது இலங்கைத் தாய் நாட்டை நிலைகுலையச் செய்த தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு நியாயமான ஒரு முடிவினைக் காண்பதற்காக எடுக்கப்பட்ட சகல முயற்சிகளுக்கும் வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மனப்பூர்வமான தமது ஒத்துழைப்பைக் கொடுத்ததுடன் தமது பங்களிப்பையும் தாராளமாகச் செய்துள்ளனர்.

ஆனாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான ஒரு பரிகாரம் காணப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தி வந்த அதேவேளையில் அந்தப் பரிகாரங்கள் முஸ்லிம்களது ஜீவாதார இன உரிமைகளையும் அக்கறைகளையும் பாதிப்பனவாக அமைந்து விடக்கூடாது என்பதிலும் முஸ்லிம்கள் மிகுந்து கரிசனை கொண்டுள்ளார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று காணப்பட்டு, வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கும் வகையில் ஆட்சியும், அதிகாரங்களும் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் போது வடக்கு கிழக்கு மாகாணங்களை தமது பாரம்பரிய வசிப்பிடமாகக் கொண்டு வாழும் முஸ்லிம்கள் கௌரவத்துடன் சுதந்திரமாகவும், அச்சமற்று வாழ்வதற்கும் சிறந்ததும், பொருத்தமானதுமான ஒரு ஒழுங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வரக்கூடிய ஒரு தனிமாகாணத்தையோ அல்லது தனி மாநிலத்தையோ அமைத்தெடுத்துக் கொள்வதேகாகும் என்பதே இலங்கை முஸ்லிம்களின் இன்றைய ஏகோபித்த கோரிக்கையாகும்.

இந்த ஏகோபித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை

முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் லீக், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம், ஏறாவூர் முஸ்லிம் புனர்வாழ்வுச் சபை, முஸ்லிம் இளைஞர் பேரவை ஆகிய முக்கிய முஸ்லிம் இயக்கங்கள் தமது ஆலோசனைகளை ஆட்சியாளர்கள் முன் சமர்ப்பித்துள்ளனர்.

பேரினக் கொடுமையை எதிர்த்து தமது இன உரிமைக்கும் உயர்வுக்கும் போராடும் இலங்கைத் தமிழ் இனம் தம்மைவிடச் சிறுபான்மையினரான முஸ்லிம் இனத்தின் உரிமைகளை உதாசீனம் செய்யமாட்டார்கள், செய்வதும் முறையல்ல. இலங்கைத் தமிழர்கள் நிரந்தரமாக சிங்களவர் மத்தியில் ஒரு சிறுபான்மை அடிமைச் சமூகமாக இருக்கக் கூடாது என்பதற்காகவே திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அன்று ஐம்பதுக்கைம்பது சமபலப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வரக்கூடிய ஒரு பிராந்தியம் ஏற்படுத்தப்படாவிட்டால் முஸ்லிம் இனம் இலங்கையில் சிறுபான்மைக்குள் ஒரு சிறுபான்மையாக நிரந்தரமாக வாழவேண்டிய நிலை ஏற்படும். மேலும் ஒற்றையாட்சியுள்ள நாட்டில் ஒரு சிறுபான்மை இனத்தின் இன உரிமைக்கு மற்ற ஒரு சிறுபான்மை இனம் எந்த வகையிலும் உத்தரவாதமளிக்க முடியாது என்பது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

'அந்நிய ஆட்சியின்கீழ் பெரிதும் புறக்கணிக்கப்பட்ட இனத்தவர் சிங்களவர். இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களும் சிங்களவர்கள்தான். அந்நியர் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் தங்கள் இன விகிதாசாரத்தையும் விடப் பன்மடங்கு கூடுதலான சலுகைகளைப் பெற்றிருந்தனர்' எனக்கூறித் திட்டமிட்டு தமிழர்களின் நியாயமான இன உரிமைகளை பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்கள், சுதந்திரத்தின் பின் புறக்கணித்தனர். இதனை ஆட்சேபித்து தமிழர் சத்தியாக்கிரகம், சமஷ்டி ஆட்சி,

தனி நாட்டுப் பிரிவினை என்றவாறு ஏறக்குறைய நாற்பது வருடமாக உரிமைப் போராட்டம் நடத்துகின்றனர். இப்போது அதில் ஓரளவு வெற்றியும் பெறக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. அன்று சிங்களவர்கள் கூறியது போல, இன்று தமிழர்கள், 'முஸ்லிம்கள் சிங்கள அரசாங்க ஆட்சியில் பல சலுகைகளைப் பெற்றவர்கள், வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாநில அமைப்பு தமிழர்களின் போராட்டத்தால் கிடைத்தது' என்று கூறி முஸ்லிம்களின் இன உரிமைகளை ஏற்க மறுத்துவிட்டால் அல்லது முட்டுக்கட்டையாக இருந்தால் தமிழர் தமது இன உரிமைகளைப் பெற என்னென்னவெல்லாம் செய்தார்களோ, முஸ்லிம்களும் அத்தகையான அனைத்தையும் அதைவிடக் கூடுதலாகவும் எதிர்காலத்தில் செய்வார்கள் என்பது நிச்சயம்.

011903

எமது சமீபத்திய அனுபவத்திலிருந்து தமிழர்கள் முஸ்லிம்களைத் துரத்திவிட்டு, வட, கிழக்கு மாகாணங்களை ஒரு தனி இனத்துவ தமிழ்ப் பிராந்தியமாக்கி விரைவில் தமிழ் ஈழத்தைத் தாபிக்கும் திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளனர் என்பதில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு எந்தவித சந்தேகமுமில்லை. தமிழ்த் தலைவர்கள் பசப்பு வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் காலத்துக்குக் காலம் முஸ்லிம்களுக்குக் கூறிய போதிலும், உண்மையான நடைமுறையில் தமிழர்கள் முஸ்லிம்களின் சட்டநிலைத் தகவுள்ள உரிமை பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கும் முயற்சிகளில் திட்டமிட்டுச் செயல்படுகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் தமது உயிரையும், உடமைகளையும் பாதுகாப்பதற்குச் சுதந்திரமான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனே செய்து கொள்ள வேண்டியது இன்று ஒரு இன்றியமையாத விடயமாகும்.

எம்.ஐ.எம்.முஹியத்தீன்

## National Digitization Project

### *National Science Foundation*

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil
2. Date Scanned : 2018.02.15
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.15

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*